# சமத்துவத்தை நிலை நாட்டுவதில் திராவிட மாடல் ஆட்சிக்காலம்தான் பொற்காலம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

## ஆதி திராவிடர் முன்னேற்றத்திற்கு அரசு எப்போதும் துணை நிற்கும்!

நலத்திட்டங்களைச் செயல்படுத்தி சமூக நீதியை நிலைநாட்டுகின்ற அரசாக, நம்முடைய திராவிட மாடல் அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது!

**திராவிட மாடல் அரசின் முக்கிய சாதனைகள்!**

அப்படிப்பட்ட நம்முடைய அரசின் முக்கிய சாதனைகளை தலைப்புச் செய்திகளாக சுருக்கமாக சொல்ல வேண்டும் என்றால்,

- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் மக்கள்தொகை சதவிகிதத்துக்கு ஏற்ப வழங்கப்படும் நிதியை முழுமையாக பயன்படுத்துவதை உறுதி செய்ய, ‘தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மேம்பாட்டு செயல் திட்ட சட்டம் மாநில ஆணையம்!
- விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு ஆகியவற்றைக் கொண்டு வந்திருக்கிறோம்!
- கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் இருக்கின்ற, ஆதிதிராவிடர் குடியிருப்புகளில், அடிப்படை வசதிகளை மேம்படுத்துகின்ற வகையில் ஆயிரம் கோடி ரூபாயில் உருவாக்கப்பட்ட அயோத்திதாச பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது!
- சமூக நல்லிணக்கம், சாதிப் பாகுபாடற்ற சமூக ஒற்றுமையை கடைபிடிக்கும் கிராமங்களை ஊக்குவிக்கின்ற வகையில், பத்து கிராமங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் பத்து இலட்சம் ரூபாய் வீதம் நிதி வழங்கப்பட்டிருக்கிறது.
- இந்த நிதிநிலை அறிக்கையில், பத்து கிராம பஞ்சாயத்துகளுக்கு தலா ஒரு கோடி ரூபாய் வீதம் உயர்த்தி சமூக நல்லிணக்க விருது உயர்த்தி வழங்க அறிவித்திருக்கிறோம்!
- கடந்த நான்கு ஆண்டுகளில், சமூக நீதி மற்றும் சமத்துவ சிந்தனைகள் குறித்து ஆறாயிரத்து 977 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டிருக்கிறது.
- ஆண்டுதோறும் திருவள்ளுவர் நாளன்று, ‘டாக்டர் அம்பேத்கர் விருது’ வழங்கப்பட்டு வருகிறது. இது எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக இந்த அரங்கிற்கு வந்திருக்கின்ற மாணவர்களை பார்க்கிறேன்...

**சமூகத்தின் முன்னேற்றமும் மாணவர்கள் மீதான அக்கறையும்!**

“அண்ணல் அம்பேத்கர் அயலக கல்வி உதவித்தொகை” திட்டத்தின்கீழ், வெளிநாடுகளில் முதுகலை மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகளை மேற்கொள்ளும் இந்த 174 மாணவர்களும்தான் என்னுடைய மகிழ்ச்சிக்கு காரணமாக அமைந்திருக்கிறது! ஏனென்றால், இது திராவிட மாடல் ஆட்சியின் சாதனை!

ஒரு சமூகத்தின் முன்னேற்றம் என்பது, அந்தச் சமூகத்தில் இருக்கின்ற மாணவர்களை நாம் எவ்வளவு கண்ணுங்கருத்துமாக பார்க்கிறோம் என்பதில்தான் இருக்கிறது! அதற்கு இங்கே வந்திருக்கக்கூடிய மாணவர்களே சாட்சி! நாம் மாணவர்களின் கல்விக்காக பல திட்டங்களை செயல்படுத்துவது மட்டுமல்ல, அதிக எண்ணிக்கையில் விடுதிகளையும் கட்டியிருக்கிறோம்!

மாணவர்களுடைய முன்னேற்றம் என்பது கண்கள் மாதிரி என்றால், பெண்களுடைய முன்னேற்றம் என்பது இதயத்துடிப்பு மாதிரி! அதைத்தான் புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள், “ஒரு சமூகத்தின் முன்னேற்றத்தை அந்த சமூகத்தில் உள்ள பெண்களின் முன்னேற்றத்தை வைத்தே அள விடுகிறேன்” என்று சொன்னார். அதனால்தான், பெரிதும் விவசாயத் தொழிலாளர்களாக இருக்கின்ற ஆதிதிராவிட மகளிரை நில உடைமையாளர்களாக மாற்றி, அவர்களுடைய சமூக நிலை மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துகின்ற நோக்கத்துடன், “நன்னிலம்” என்ற ஆதிதிராவிடர் மகளிருக்கான நிலம் வாங்கும் திட்டத்தை இன்றைக்கு செயல்படுத்திக் கொண்டு இருக்கிறோம்.

கடந்த இரண்டு ஆண்டுகளில், 625 பயனாளிகளுக்கு முப்பது கோடி ரூபாய் மானியம் வழங்கப்பட்டு, மகளிரை நில உடைமையாளர்களாக நம்முடைய அரசு மாற்றியிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடனும், பெருமையுடனும் நான் சொல்ல விரும்புகிறேன்.

**பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கைகள்!**

அதுமட்டுமல்ல, நம்முடைய அரசின் முத்திரை திட்டமான மகளிருக்கான கட்டணமில்லா விடியல் பயணத் திட்டத்தில் அதிகம் பயனடையக் கூடியவர்கள் நம்முடைய ஆதிதிராவிடர் சமூகத்தைச் சார்ந்த சகோதரிகள் தான். பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், வளர்ச்சிக்கான அடிப்படை வருமானம் ஈட்டுகின்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், தாட்கோ மூலம் வழங்கப்படுகின்ற மானியத்தை 2023ஆம் ஆண்டு முதல் இரண்டு இலட்சத்து 50 ஆயிரத்தில் இருந்து, ஆறு இலட்சம் ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம்.

பொருளாதார முன்னேற்றத்திற்காக நான் தொடங்கி வைத்த ‘அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தில்’ மூவாயிரத்து 950 தொழில் முனைவோ ருக்கு 630 கோடி ரூபாய் கடனுதவி வழங்கி இருக்கிறோம். அதில் மானியம் மட்டுமே 403 கோடி ரூபாய்! இதில் பயனடைந்திருக்கின்ற பெண் தொழில் முனைவோருடைய எண்ணிக்கை மட்டும் 1000 பேர்!

அதோடு தூய்மைப் பணியாளர்களின் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான ‘தொழில் முனைவு’ திட்டத்தின்கீழ் 468 பயனாளிகளுக்கு 89 கோடியே 71 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டிருக்கிறது. பழங்குடியின மக்களுடைய வாழ்வாதார திட்டங்களுக்காக ஆண்டுக்கு 250 கோடி ரூபாய் வீதம், நான்கு ஆண்டுகளில் ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் ‘தொல்குடி’ என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**ஆதிதிராவிடர் - பழங்குடியினருக்கு எப்போதும் துணை நிற்போம்!**

இன்றைக்கு சமத்துவ நாளைக் கொண்டாடுகின்ற இந்தத் தருணத்தில், நான் உறுதியோடு சொல்லிக் கொள்ள விரும்புவது, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் ஒளிமயமான முன்னேற்றத்திற்கு நம்முடைய திராவிட மாடல் அரசு எப்போதும் துணைநிற்கும்.

சாதியின் பெயரால் தொடக்கூடாது, கண்ணில்படக்கூடாது, தெருவில் நடக்கக்கூடாது, கோயிலுக்குள் நுழையக் கூடாது என்பதையெல்லாம் நம்முடைய கொள்கைகளால், போராட்டங்களால், இடைவிடாத பரப்புரைகளால் உடைத்து நொறுக்கிவிட்டோம்!

கல்வியும், படிப்பும், வேலையும், பதவியும், ஒடுக்கப்பட்ட சமூகங்களின் கையில் அதிகாரம் செலுத்தும் வாய்ப்பைக் கொடுத்திருக்கிறது. இதுதான் திராவிட இயக்கம் ஏற்படுத்தியிருக்கக்கூடிய மாற்றம். கல்வி, வேலைகள், அரசாங்கம், அதிகாரம், நிர்வாகம், அறிவு என்று எல்லாமே ஜனநாயகமயமாக ஆகிவிட்டது. இந்த முன்னோக்கிய பாய்ச்சலில்தான் சமூகமும், ஜனநாயகமயமாகும். சாதிதான், தமிழினத்தை பிளவுபடுத்தும் முதலாவது சக்தி!

அந்த ஆயிரமாண்டு அழுக்கை ஒழிக்கத் தான் நாம் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம். நாம் அனைவரும் தமிழர்கள் என்று உணர வைப்பதுதான் நம்முடைய நோக்கம்!

ஒடுக்கப்பட்டோரின் கல்வி, சமூக, பொருளாதார உயர்வுக்கான அனைத்து உரிமைகளையும் நம்முடைய திராவிட மாடல் அரசு இன்றைக்கு வழங்கி வருகிறது. இதற்கு முன்னால் இருந்த எந்த ஆட்சியிலேயும் இல்லாத சாதனைகள், இந்த திராவிட மாடல் ஆட்சியில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது!

**திராவிட மாடல் ஆட்சிக் காலம்தான் பொற்காலம்!**

இன்னும் பெருமையோடு சொல்ல வேண்டும் என்றால், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்கு திட்டங்களை வழங்குவதில், நிதி வழங்குவதில், தொழில் முனைவோர்களை உருவாக்குவதில், மாணவர்களை உயர்கல்விக்காக வெளிநாட்டுக்கு அனுப்புவதில், வன்கொடுமைகளை குறைத்ததில், சமூக, சமத்துவத்தை நிலைநாட்டுவதில், நம்முடைய திராவிட மாடல் ஆட்சிக்காலம்தான் பொற்காலம் என்பதை நெஞ்சை நிமிர்த்தி நான் சொல்ல முடியும்!

**சமத்துவ சமுதாயத்தை அமைக்க வேண்டும்!**

“ஆதிதிராவிடர்களுக்கு நலத்திட்ட உதவி செய்வதோடு நம்முடைய அரசினுடைய கடமை முடிந்துவிட்டதாக நான் கருதவில்லை. சுயமரியாதை சமதர்மச் சமூகத்தை உருவாக்குவதற்கு இன்னும் நெடுந்தூரம் பயணிக்க வேண்டும்” என்று இதைத்தான் நான் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

நம்முடைய பாதையும், பயணமும் மிக நீண்டது. என்னைப் பொறுத்தவரைக்கும், மகாத்மா ஜோதிபா ஃபுலே - புரட்சியாளர் அம்பேத்கர் தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா முத்தமிழறிஞர் கலைஞர் போன்ற தலைவர்கள் உருவாக்க பாடுபட்ட, சாதிய ஏற்றத்தாழ்வுகள் இல்லாத சமத்துவச் சமுதாயத்தை அமைக்க வேண்டும்!

இதற்கான மாற்றம் தனிமனிதர்களில் தொடங்கி, சமூகத்தின் ஒட்டுமொத்த எண்ணமாக வெளிப்படவேண்டும்! அப்போதுதான், ஆயிரம், ஆயிரம் ஆண்டுகளாக இந்த மண்ணிலேயும், மக்களுடைய எண்ணத்திலேயும் இருக்கின்ற ஏற்றத்தாழ்வுகளை நீக்க முடியும்!

ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கொண்ட வரலாற்றை கடந்து நூறு, இருநூறு ஆண்டுகளாக நாம் அடைந்திருக்கின்ற வளர்ச்சியும், வெற்றியும், சமூக மாற்றமும், கொஞ்சம்தான்!

நமக்குள்ளே ஏற்பட்டிருக்கின்ற முற்போக்கு, சமத்துவ எண்ணங்களும், சிந்தனைகளும் எல்லோரிடமும் ஏற்படவேண்டும். அதற்காக நாம் ஓயாமல் உழைக்க வேண்டும். வெறுப்பு அரசியலைவிட அன்பை விதைக்கும் அரசியல்தான் வலுவானது, ஆற்றல் வாய்ந்தது என்று நான் உளப்பூர்வமாக நம்புகிறேன்!

தமிழ் - தமிழர் என்ற உணர்வுதான் நம்மை ஒன்றிணைக்கும்! நம்முடைய பாதையில் இடர்கள் ஏற்படும் ஏற்படுத்தப் படும் அதையெல்லாம் உணர்ந்துதான் நம்முடைய உழைப்பைக் கொடுக்க வேண்டும்! அதைத்தான் தந்தை பெரியார் புரட்சியாளர் அம்பேத்கர் முதலானோர் செய்தார்கள்.

**நீலிக்கண்ணீர் வடிப்பவர்களின் ஆணவப் பேச்சு!**

எதிரிகளையும் எதிரிகளின் பரப்புரைகளையும் அடையாளம் கண்டு கொண்டாலே, அந்தத் தடைகளை உடைப்பது எளிதாகிவிடும். இந்தச் சமூகத்தில் ஆங்காங்கே நடைபெறுகின்ற ஒரு சில பிற்போக்குத்தனமான செயல்களைக் காட்டி, இதுதான், பெரியார் மண்ணா? இதுதான், அம்பேத்கர் மண்ணா? என்று நீலிக்கண்ணீர் வடிக்கிறவர்களின் எண்ணம் என்ன தெரியுமா? இந்த மண்ணில் இந்தக் கொடுமைகள் இன்னும் தொடர்கின்றதே என்ற கவலை கிடையாது. அவர்களுடைய எண்ணம் “நீங்கள் மாற்றத்தை விதைத்துவிட்டதாக, பண்படுத்திவிட்டதாக பெருமைப்படுகின்ற மண்ணில் இன்னமும் எங்களுடைய பழமைவாதமும், பிற்போக்குத்தனமும், அடக்குமுறையும் இருக்கிறது” என்று காண்பிக்கின்ற ஆணவம்தான் அந்த பேச்சு!

நம்முடைய உழைப்பால், சமூகத்தில் எஞ்சியிருக்கின்ற அந்தக் கொடுமைகளையும் நிச்சயம் களையெடுப்போம்! சமூகப் பணிகளாலும், சட்டப் பணிகளாலும் சமத்துவத்தை நோக்கிய நகர்வுகளை நாம் சாத்தியப்படுத்தி ஆகவேண்டும்.

அதற்கு, தந்தை பெரியார், புரட்சியாளர் அம்பேத்கர் உள்ளிட்ட மானிட சமுதாயத் தலைவர்கள் தந்திருக்கும் அறிவொளியில், மக்களோடு பயணிப்போம்! பொது உடைமை, சமத்துவம், சமூகநீதி கொண்ட சமுதாயத்தை உருவாக்க புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்தநாளில் மதவெறியை மாய்த்து மனிதநேயம் காப்போம்! ஜெய் பீம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### தனியார் மூலமாக ஹஜ் பயணிகளுக்கான ஒதுக்கீடு குறைவு:

## சவுதி அரசுடன் பேசி தீர்வு காண்க!

### ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சரிடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, ஏப்.16–

இந்தியாவில் இருந்து தனியார் நிறுவனங்கள் மூலம் ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ளும் பயணிகளுக்கான ஒதுக்கீடு திடீரெனக் குறைக்கப்பட்டுள்ளது. உடனடியாக ஒன்றிய அரசு சவுதி அரசுடன் பேசி விரைவில் தீர்வு காண வேண்டும் என்று ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சரை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப்பதிவில் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத் தளப்பதிவு வருமாறு:–

இந்தியாவில் இருந்து தனியார் நிறுவனங்கள் மூலமாக ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ளும் பயணிகளுக்கான ஒதுக்கீடு திடீரெனக் குறைக்கப் பட்டிருப்பது பல்லாயிரக்கணக்கானோரைப் பரிதவிப்பில் ஆழ்த்தியுள்ளது.

ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் அவர்கள் உடனடியாக சவுதி அரசுடன் பேசி, இதற்கு விரைவில் தீர்வு காண வேண்டும் என வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.




ஈரோடு மாவட்ட ஜமாத்துல் உலமா சபை சார்பில் வக்பு சட்டத்தை திரும்பப் பெறக்கோரி ஹஜ்ரத் பைஜுர் ரஹ்மான் தலைமையில் கண்டன பொதுக் கூட்டம் அரசு காஜி கிபாயத்துல்லா முன்னிலையில் அமைச்சர் சு.முத்துசாமி கலந்துகொண்டு ஒன்றிய அரசை கண்டித்து சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் கே.இ.பிரகாஷ் எம்.பி., வி.சி.சந்திரகுமார் எம்.எல்.ஏ., துணை மேயர் வி.செல்வராஜ், மு. சுப்பிரமணியன், காங்கிரஸ் ஜாபர் சாதிக், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சாதிக், டாக்டர் அப்துல்லா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

### தமிழ்நாட்டின் உயர்கல்வியை மேம்படுத்துவதற்காக

## அனைத்துப் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### இன்று - முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறுகிறது!

**சென்னை, ஏப்.16–**

**தமிழ்நாடு அரசின் செய்தி வெளியீடு வருமாறு:–**



**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இன்று (16.04.2025) மாலை சென்னை, தலைமைச் செயலகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் தமிழ்நாட்டில் உயர்கல்வியை மேம்படுத்துவதற்காக அனைத்துப் பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள் மற்றும் பதிவாளர்களின் ஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது.**

**இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**



கழக மாணவரணியை தமிழ்நாட்டின் இல்லங்கள் தோறும் கொண்டு சேர்க்கும் வகையில், இல்லங்கள் தோறும் மாணவர் உறுப்பினர் சேர்க்கை மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. வழிகாட்டுதலின்படி, ஒன்றியக் கழகச் செயலாளர் புலிவலம் ஏ.தேவா தலைமையில் அடியக்கமங்கலம் ஊராட்சியில் தொடங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பகலவன், துணை அமைப்பாளரும், திருவாரூர் சட்டமன்ற தொகுதி மாணவரணி பொறுப்பாளருமான மதி.நெல்சன் மண்டேலா மற்றும் நிர்வாகிகள், மாணவர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.